5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல பேருந்து வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று (13–5–2010) இரவு 7–30 மணியளவில், சென்னை, தாஜ் கொரமண்டல் ஓட்டலில் விருந்து அளிக்கவுள்ளார்கள். இதுகுறித்து அழைப்பிதழ்கள் ஏற்கெனவே மாண்புமிகு உறுபபினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அனைவரும் அவ்விருந்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், உறுப்பினர்கள் விருந்தில் கலந்து கொள்வதற்கு வசதியாக சட்டப் பேரவைக் குடியிருப்பு வளாகத்திலிருந்து இன்று மாலை 6–30 மணி, 6–40 மணி, 6–50 மணி மற்றும் 7–00 மணியளவில் பேருந்துகள் புறப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரேனும் கேட்டதுண்டா? பாரேனும் பகர்ந்ததுண்டா? 18 மாதத்திற்குள் இந்த பார் ஆளுகின்ற மன்றத்தை ஒரு முதலமைச்சரே முன் நின்று நிறுவி, இந்த மன்றத்திலே என்னைப்போல் எளியவர்களையெல்லாம் அமர வைத்து பதிலளிக்கின்ற வாய்ப்பைத் தந்திருக்கின்ற, 18 ஆண்டுகள் முதலமைச்சராக தன்னுடைய பணியை முடித்து 19–வது